**பத்தேகம பிரதேச சபை - 2023**
-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பத்தேகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பத்தேகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன் பள்ளிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த மின் விசிறி செலவு ரூபா 34,000 தொகையாக காணப்பட்ட போதிலும், அதனை ரூபா 114,305 தொகையென தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சுவடிகூட ஏத்தானங்கள் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 70,310 இற்கான செலவு காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) மூலதனச் சொத்துக்கள் தனதாக்கலுக்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 413,840 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) வங்கிக்கு கிடைத்திருந்த ரூபா 60,586 இற்கான நேர் அனுப்புதல்கள் மற்றும் நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 437,734 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 110,000 தொகைக்கான 02 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | எதிர் காலத்தில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 | 02 வருடங்களை கடந்துள்ள ரூபா 754,186 இற்கான 25 வைப்பு மீதிகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | 02 வருட காலத்தை கடந்துள்ள வைப்பு மீதிகள் தொடர்பாக கண்டறிந்து வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது செயலாளரினால் தொகுதிப் போக்குவரத்து வசதிகளின்றி வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே 04 தடவைகள் பிரயாணம் செய்வதற்காக சபையின் வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் எரிபொருளுக்காக ரூபா 187,818 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மீண்டும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக மந்திரிமார் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இந்த போக்குவரத்து வசதிகள் பயன்படுத்தப்படமாட்டாது என. | கிரயம் குறைவாகக் கூடியவாறு செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 37,237,241 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 76,522,030 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 7,526,443 | 7,778,380 | 6,009,653 | 10,819,398 | 5,191,041 | 4,810,368 | 4,402,458 | 9,148,681 |
| வாடகை | 19,715,780 | 4,772,115 | 4,875,790 | 116,536 | 46,765,970 | 51,909,200 | 51,995,395 | 220,211 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,733,200 | 1,093,826 | 923,926 | 169,900 | 2,200,362 | 761,565 | 761,565 | - |
| ஏனைய வரு மானங்கள் | 17,656,673 | 16,233,477 | 16,147,720 | 2,111,108 | 13,629,580 | 21,940,883 | 20,188,409 | 2,025,350 |
| | 46,632,096 | 29,877,798 | 27,957,089 | 13,216,942 | 67,786,953 | 79,422,016 | 77,347,827 | 11,394,242 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 11,394,242 தொகை காணப்பட்டதுடன் வருட இறுதியில் உள்ளவாறு அந்த நிலுவை ரூபா 13,216,942 தொகையாகக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பத்தேகம பிரதேச சபை அதிகார சபை பிரதேசத்தில் வர்த்தக வரி செலுத்த வேண்டிய 118 நிறுவனங்கள் வியாபார அனுமதிப்பத்திரம் செலுத்த வேண்டிய 29 நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் வரி செலுத்த வேண்டிய 06 நிறுவனங்கள் குறிப்பிட்ட கட்டணங்கள் செலுத்தி இருக்கவில்லை. அதனால் சபை ரூபா 267,560 இற்கான வருமானம் ஒன்றினை இழந்திருந்தது. | குறிப்பிட்ட தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | உரிய முறையில் வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 74 அறிவித்தல் பலகைக்காக ரூபா 1,064,100 இற்கான தொகையொன்று சபையினால் அறவீடு செய்திருக்கவில்லை. | துணைச் சட்டங்களின் படி அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | அறிவித்தல் பலகைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,255,920 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 79,629,105 தொகை காணப்பட்டது. | 2024 ஆண்டில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 16 வகையைச் சேர்ந்த ரூபா 103,992 பெறுமதியான 595 மின்சார இருப்பு விடயங்கள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் | இந்த விடயங்கள் தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | தேவைப்பாட்டினை கவனம் செலுத்தி மின்சார இருப்புக்கள் கொள்வனவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் தற்போது அந்த மின்சார இருப்பு வகைகள் வீதிவிளக்கு பொருத்துவதற்கு பயன்படுத்தப்படாதவை என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | பிரதேச சபையின் சந்தை வருமானம் சேகரிப்பதற்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் எதுவித அங்கீகாரமுமின்றி வாய்மொழி மூலம் சபையின் வருமானம் சேகரிப்பதற்காக அதிகாரம் அளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 348,842 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தொடர்ந்தும் சேவையை பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | எதிர்காலத்தில் சட்டரீதியாக செயற்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 20 நிறுவனங்களில் இருந்து ரூபா 90,000 இற்கான கட்டணம் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி எழுத்துமூலம் அறிவுருத்தல் மேற்கொள்ளப்பட்டது என. | தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | தென் மாகாண பிரதான செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள கெப் வண்டி 2012 ஆண்டு பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அது அந்த ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. உள்ளூராட்சி திணைக்களத்தின் இயந்திர பொறியியலாளர் இந்த வாகனத்தை திருத்த வேலை மேற்கொள்ளல் பயனற்றதொன்றாகக் காணப்படுவதனால் 02/2015 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் படி அப்புறப்படுத்தும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | உரிமை தொடர்பான சிக்கலை தீர்த்துக் கொண்ட பின்னர் முறைப் பிரகாரம் அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என. | வாகனத்தை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 17(3) இற்கு இணங்க சபைக்கு சொந்தமான அனைத்து ஆதனங்களும் சபையினால் நிருவகிக்கப்பட வேண்டியிருந்த | எல்லைவேலி மற்றும் எல்லைத் தூண்கள் நடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | காணிகளுக்கு எல்லை வேலிகள் போடப்பட்டு உரிமையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், சபைக்கு சொந்தமான 30 காணிகளுக்கு எல்லைவேலி இடப்பட்டிருக்காததுடன், 11 காணிகளின் உரிமையை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | சபைக்கு சொந்தமான கிரயம் குறிப்பிடப்படாத 04 இயந்திரங்கள் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமையால் 08 வருடங்களுக்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | நிறுவனத்தின் இயந்திர பிரிவின் மூலம் திருத்தவேலை மேற்கொள்வதற்கு மற்றும் நீர் பவுசர் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் மூலம் உச்சமட்ட பயன் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) | வட்டார அடிப்படையில் 21 வொலிபோல் விளையாட்டுத் திடல்கள் நிர்மாணிக்கப்பட்டு மின்ஒளி வழங்குவதற்காக மின்சார உபகரணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றில் 09 விளையாட்டுத் திடல்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் 16 விடயங்கள் தொடர்பாக ரூபா 177,668 தொகை பெறுமதியான வீதிவிளக்கு உபகரணங்கள் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டது. | விளையாட்டுத் திடல்கள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த இடங்களில் காணியை உரித்தாக்களில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக் காலம் முடிவடைதல் மற்றும் செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது ஏற்பட்டிருந்த செய்முறைசார் சிக்கல்களின் காரணமாக இந்த செயற்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நேரிட்டிருந்தது என. | சிக்கல்களை தீர்த்துக் கொண்டு உத்தேச திட்டங்களை விரைவாக செயற்படுத்த வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| காசிதெனிய ஏலவிற்பனைக் காணியில் விளையாட்டுத் திடல் தயாரிக்கும் நிர்மாண வேலையின் வேலை விடய இலக்கம் 02 இற்காக விளையாட்டுத் திடலில் இருந்து பெற்றிருந்த 830 கனமீற்றர்கள் மண் எக்ஸவேடர் இயந்திரத்தை பயன்படுத்தி பரப்புதல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் இதற்காக உரிய ரேட்கள் பயன்படுத்தப்படாமையால் ரூபா 200,030 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட உத்தியோகபூர்வ ரேட்களின் பகுப்பாய்வு பதிவுகள் கிடைத்திருக்காமையால் இவ்வாறு பயன்படுத்தப்பட்ட ரேட்கள் பயன்படுத்த நேரிட்டது என. | குறிப்பிட்ட உத்தியோகபூர்வ ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |